பக்கங்கள் 24+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 02 திங்கட்கிழமை 18.08.2025 | அதிர்வு 18

## இன்றைய ஹர்த்தால்



படங்கள் உள்ளே...

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழ்ப்பாணம் தவிர ஏனைய இடங்களில் ஹர்த்தால் வெற்றி!

## தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தவிர ஏனைய இடங்களில் ஹர்த்தால் வெற்றியளித்துள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இன்று பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு கோரிக்கை முன்வைத்து ஹர்த்தாலுக்குத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்தது. 06

# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஹர்த்தாலுக்கு தமிழ், முஸ்லிம்கள் ஆதரவு







தொடர்ச்சியாக நிலவும் அதிகளவு இராணுவப் பிரசன்னத்துக்கும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடி ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்தனர்.




# ஹர்த்தாலால் முடங்கியது முல்லைத்தீவு

**(பா.சதீசன்)**

வர்த்தக நிலையங்கள் மூடப்படதுடன், தனியார் பொதுப்போக்குவரத்தும் முடங்கியது

அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகவும், முல்லைத்தீவு – முத்துஐயன்கட்டு பிரதேசத்தில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கில் இன்று இடம்பெற்ற ஹர்த்தாலால் முல்லைத்தீவு மாவட்டம் முடங்கியது.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் முடங்கியிருந்தன. மக்கள் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.
















# ஹார்த்தலால் கிளிநொச்சியும் முடக்கம்

வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரி இன்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் போராட்டத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் இயல்வு நிலை பாதிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் காலையில் சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.















# யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நிலைவரம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியால் பூரண ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சில இடங்களில் ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கப்பட்ட நிலையில், பெருமளவான இடங்களில் இயல்வு நிலை காணப்பட்டது.

காலையில் சில இடங்களில் கடைகள் பூட்டப்பட்டு இருந்தாலும் , பல இடங்களில் கடைகள் திறக்கப்பட்டு இருந்தமையும் அவதானிக்க முடிந்தது.

அதேவேளை, போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று இயங்கி வந்ததுடன் அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என்பனவும் வழமை போன்று இயங்கின.


















# வவுனியாவில் ஹர்த்தால் நிலைவரம்

(கி.வசந்தன்)

அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் இன்று ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் வவுனியா மாவட்டத்தில் பல இடங்களில் பொதுமக்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. சில இடங்களில் மாத்திரம் பொதுமக்களின் செயற்பாடுகள் இயல்பு நிலையில் இருந்தன.

வவுனியா நகரத்தில் அநேக வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. சில வர்த்தக நிலையங்கள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தன.

ஹர்த்தால் போராட்டத்துக்கு வவுனியா உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் தனது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது. அவர்களது மொத்த வியாபார சந்தைக் கடைத்தொகுதிகள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

இதேவேளை, பழைய பஸ் நிலையம் மற்றும் பசார் வீதியில் உள்ள இஸ்லாமிய வியாபார நிலையங்களில் சில வர்த்தக நிலையங்கள் மட்டும் திறந்திருந்தன.

இதேவேளை, புறநகர்ப் பகுதிகளான குருமன்காடு, செட்டிகுளம், நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் அநேககமான வர்த்தக நிலையங்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவைத் தெரிவித்து பூட்டியிருந்தன.














# திருகோணமலையில் ஹர்த்தால் நிலைவரம்







**(திருகோணமலை நிருபர்கள்)**

வடக்கு, கிழக்கில் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகவும், முல்லைத்தீவில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்தும் திருகோணமலை மாவட்டத்தில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை நகர் பகுதியில் பல கடைகள் மூடப்பட்டிருந்தன. சில கடைகள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தன.

திருகோணமலை பிரதான சந்தை திறக்கப்பட்டிருந்த நிலையிலும் வியாபார நடவடிக்கைகள் வளமை போன்று இடம்பெறவில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களில் மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.




## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**யாழ்ப்பாணம் தவிர...**

அதனை ஏற்று வடக்கு, கிழக்கில் பெரும்பாலான இடங்களில் ஹர்த்தலுக்கு ஆதரவு கிடைத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ். நகர் பகுதியில் மாத்திரமே வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. அவர்கள் ஆதரவு வழங்காதமை எமக்கு மன வருத்தம்.

எமது ஹர்த்தால் அறிவிப்பு வந்த வுடனேயே ஜனாதிபதி, அமைச்சர் பிமல் ரத்நாயக்க உள்ளிட்டவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு பேசி இருந்தனர். முத்துஜயன்கட்டு இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என அவர்கள் கூறினார்கள். இதுவே எமது வெற்றி.

இந்தக் ஹர்த்தால் ஓர் அடையாளப் போராட்டமே. இனிவரும் காலங்களில் வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றக் கோரிப் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்.” – என்றார்.




# மன்னாரில் ஹர்த்தால் நிலைவரம்

**(மன்னார் நிருபர்கள்)**

வடக்கு, கிழக்கில் அதிகரித்த இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான இன்றைய ஹர்த்தால் போராட்டத்தால் மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் இடம்பெற்றன. ஆனால், வீதிகளில் மக்களின் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

மன்னார், பஜார் பகுதியில் மாத்திரம் சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.












# சாவகச்சேரியில் ஹர்த்தால் நிலைவரம்













# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஹர்த்தாலுக்கு தமிழ், முஸ்லிம்கள் ஆதரவு















# சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் செய்துள்ள முன்மாதிரியான செயற்பாடு!



சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் ஞா. கிசோர் தனது முதல் மாதக் கொடுப்பனவில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட மைதானத்துக்கு மின்விளக்குகள் பொருத்துவதற்கு வழங்கியுள்ளார்.

நகரசபையின் நகர் வட்டார உறுப்பினரான கிஷோர், துணியில் கிழக்கு வட்டாரத்தைச் சேர்ந்த கரப்பந்தாட்ட அணியினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து தனது மாதாந்தக் கொடுப்பனவை வழங்கி அதற்கான வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

ஒளியூட்டப்பட்ட மைதானத்தை நேற்று (17) இரவு கழகத்தினரிடம் கையளித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர்களும் தமது மாதாந்த கொடுப்பனவைப் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விமான நிலைய நெருக்கடி!

விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பார்கள். வீக்கம் மிஞ்சினால் தொல்லைதான்.

பொருளாதார நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் இலங்கை அதிலிருந்து மீளுவதற்காக அந்நிய செலாவணியை ஈட்டும் வழிவகைகளை நாடி, தேடி இயங்குகிறது. அதில் முக்கியமான ஒரு மார்க்கமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவித்து, அதில் தங்கி நிற்கிறது நாடு.

வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இங்கு தங்கி செலவழிக்கும் வெளிநாட்டு நாணயம் நாட்டுக்கு பெரும் அந்நிய செலாவணி வருமான ஈட்டலாக இருந்து வருவது கண்கூடு.

2021 - 22 இல் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீளுவதற்கான முக்கிய மார்க்கங்களில் ஒன்றாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை கருதப்படுகிறது.

கிடைத்த மார்க்கங்களில் எல்லாம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிப்பதில் அரசு மிக மும்முரமாக இருக்கின்றது. வழமைக்கு மாறாக இந்த வருடத்தில் மாத்திரம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கடந்த ஒகஸ்ட் 10ஆம் திகதி வரை 14 லட்சத்துக்கும் மேல் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். அதாவது மாதாந்தம் சுமார் 2 லட்சம் பேர். தினசரி ஆறாயிரத்துக்கும் குறையாத எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வந்திருக்கிறார்கள்.

அதேசமயம் பிற பயணிகளும் நாட்டுக்கு வருகிறார்கள். வருவோரும் போவோருமாக தினசரி சுமார் இருபதாயிரம் பயணிகளைக் கையாள வேண்டிய நிலையில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் இருக்கின்றது.

ஆனால் இவ்வளவு தூரம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வர ஊக்குவிக்கும் அரசு, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அத்துணை எண்ணிக்கையில் வருகின்ற பயணிகளை கையாளக்கூடிய ஏற்பாடுகளை கவனிக்கவில்லை என்று குறை கூறப்படுகிறது

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றிரவு ஏற்பட்ட கடுமையான நெரிசல் குறித்து பயணிகள் முறைப்பாடு அளித்துள்ளனர். ‘செக்-இன் கவுண்டர்கள்’ மற்றும் குடிவரவு - குடியகல்வு பிரிவுகளில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. தாமதங்கள் காரணமாக தங்கள் விமானங்களை தவறவிடும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டது எனப் பல பயணிகள் கூறுகின்றனர்.

பயணிகள் கூற்றுப்படி, விமான நிலையம் தன் இயலுமைக்கும் அதிக கொள்ளளவுக்கு முகம் கொடுத்து இயங்கியது. ஒரே நேரத்தில் பல விமானங்களின் பயணங்கள் திட்டமிடப்பட்டமையால், புறப்படும் பகுதிகளில் கூட்டம் அதிகமாக இருந்தது. சுற்றுலாப் பயணிகளும் பாதிக்கப்பட்டவர்களில் அடங்குவர். குழப்பமான சூழ்நிலை குறித்து பலரும் விரக்தியை வெளிப்படுத்தினர்.

எதிர்காலத்தில் இதுபோன்ற இடையூறுகளைத் தவிர்க்க பணியாளர்கள் மற்றும் திட்டமிடல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு அதிகாரிகளை வலியுறுத்தி பலர் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டனர். அரசு உடனடியாகச் சிரத்தை எடுத்து நெருக்கடியை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

# சாமானிய மக்களிடையேதான் காவியங்கள் வெளிப்படுகின்றன!

## மன்னார் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை

( வாஸ் கூஞ்ஞ)

சர்வ சாதாரணமாக சாமானியமாக வாழ்கின்ற மக்களிடையேதான் காவியங்கள் வெளிப்படுகின்றன. சாதாரணமாக மக்கள் வாழும்போது அவர்கள் தங்கள் விசுவாசத்தை – அனுபவத்தை துல்லியமாக எழுத்துருவில் அமைக்கப்படுகின்றபோது அவை காலாத்தால் அழியாத ஒன்றாக மாறிவிடுகின்றன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அ.ஞானப்பிரகாசம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் பெரும்புலவராக போற்றப்படும் அமரர் அவுறான் செபஸ்தியான் குரூஸ் ஆசிரியர் விண்ணகம் சென்று 36 வருடங்கள் கடநத நிலையில், அவர் எழுதிய 'இரட்சணிய காவியம்' நூல் வெளியீடு பேசாலை யோண்மேரி விடுதியில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சலந்து கொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் அ.ஞானப்பிரகாசம் ஆண்டகை இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த வையகத்தில் நல்ல முறையில் வாழ்பவர்கள் தெய்வத்தோடு ஒருநாள் வைக்கப்படுவார்கள். பேசாலையில் பெரும் புலவர் என்று அழைக்கப்படும் அமரர் அவுறான் செபஸ்தியான குரூஸ் ஆசிரியர் இவர் 'குருசு பலவர்' என்றும் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். இந்த வகையில் 'இரட்சணிய காவியம்' என்ற நூல் இந்த புலவரின் இறுதி நூலாக அமைந்துள்ளது.

இந்த நேரத்தில் நான் ஐந்து காரணங்களை நினைவுகூற விரும்புகின்றேன். இந்த இலக்கிய விழாவிலே ஒன்று இலக்கியம் வாழ்கின்றது.

இரண்டாவதாக இந்த இலக்கியத்தை படைத்த புலவர்கள் வாழ்கின்றார்கள்.



இந்த உண்மைகளிலும் மூன்றாவதாக இருப்பது இலக்கிய படைப்புக்களை தொடர்ந்து படைத்து இந்த இலக்கியத்தைக் காப்பாற்றுவதற்கு இந்த இலக்கிய புலவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

நான்காவதாக இந்த இலக்கிய விழாக்களில் ஒரு நன்றி உணர்வு நல்லதொரு குடும்ப உணர்வு நல்லதொரு சமூக உணர்வு தோற்றுவிக்கப்படுகிறது.

பெற்றோரை நல்ல இலக்கிய படைப்பாளர்களை– புலவர்களை நாங்கள் நினைவு கூறுகின்றபோது, நாங்கள் அவர்களை பல்வேறு கோணங்களில் அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம். இந்த நன்றி கூறுகின்ற நல்ல பண்பும் எங்களிடத்தில் உருவாக்கப்படுகின்றது.

ஐந்தாவதாக இந்தப் படைப்பாளர்களின் நோக்கம் இந்தப் படைப்பாளர்களின் வாழ்வு இவர்களின் உண்மையான கருத்து சிதர்கள் வெளிப்படுகின்றது.

இந்த 'இரட்சணிய காவியம்' நூலிலே நாங்கள் நோக்குவது சர்வ சாதாரணமாக சாமானியமாக வாழ்கின்ற மக்களிடையேதான் காவியங்கள் வெளிப்படுகின்றன.

இப்படிப்பட்ட இலக்கியங்கள் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட இலக்கியங்களாக இருக்கின்றன. சாதாரணமாக மக்கள் வாழ்கின்றபோது அவர்கள் தங்கள் விசுவாசத்தை – அனுபவத்தை அவர்கள் துல்லியமாக எழுத்துருவில் அமைக்கும் போது, அவை காலாத்தால் அழியாத ஒன்றாக மாறிவிடுகின்றன.

இந்தப் புலவர் செபஸ்தியான் குரூஸ் எழுதிய 'இரட்சனிய காவியம்' அவருடைய கையெழுத்து பிரதியைப் பார்த்தேன். நான் இவற்றை பார்த்தப் போது இது ஏட்டு சுரக்காய் அல்ல. அவர் எழுதி வைத்தது வாழ்வியல்.

இவர் விசுவாசத்தை வெளி கொணர்ந்தமையால் குருசுப் புலவர் என அழைக்கப்படுள்ளார். இவரைப் போன்று புதிய படைப்பாளிகள் உருவாக வேண்டும். சாதாரண வாழ்வு ஒருநாள் இலக்கிய வாழ்வாக அமைய வேண்டும்.

நாங்கள் இப்போழுது நவீன காலம் என சொல்லுகின்றோம். எமது காலத்துக்குப் பின்பும் அவை நவீன காலமாகத்தான் இருக்கும். இவ்வாறான வேளையில் காலங்கள் – வாழ்வியல் படைப்புக்கள் வித்தியாசமாகத்தான் இருக்கும். இவைகளும் இலக்கியமாக மாற வேண்டும்.

இங்கு இவரின் பிள்ளைகள் ஐயா– அம்மா என்று அவர்களின் பண்புகளை இங்கு பாடியபோது அதுவும் ஒரு இலக்கியமாகவே காணப்படுகின்றது.

ஆகவே இலக்கியம் வாழ வேண்டும், இலக்கியப் படைப்பாளிகள் வாழ வேண்டும், புதிய இலக்கியவாதிகள் உருவாக வேண்டும். இவர்களைப் போல் நன்றியோடு இருக்கும் பிள்ளைகள் உருவாக வேண்டும். விசுவாசம்– இரட்சணியம் எமக்கு இருக்கின்றது என்ற சிந்தனையுடன் நாம் வாழுவோம்.– என்றார்.



# வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தம்பலகாமம் பாரதிபுரத்தில் கவனவீர்ப்பு!




**(எச்.எம்.ஹலால்தீன்)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் 100 நாள் செயன் முனைவின் 18 ஆவது நாள் கவனவீர்ப்புப் போராட்டம் திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாம பிரதேசத்துக்கு உட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் இன்று காலை (18) இடம்பெற்றது.

பல வழிகளிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தம்பலகாம மக்கள் தொடர்ந்தும் பல உரிமை சார்ந்த பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இன்று கூடிய மக்கள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணததிற்கு மீளப் பெற முடியாத அதிகார பகிர்வுடன் கூடிய சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வினை அரசிடம் வலியுறுத்தினர்.

இதன்போது இலங்கை அரசே இணைந்த வட கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை உறுதி செய்க போன்ற வாசகத்தை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர், வடக்குக் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகளை வலியுறுத்துகிறோம். வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என இலங்கை அரசிடம் வலியுறுத்துகிறோம்.- என்றார்.






# வீரமுனை மின்னொளி கிரிக்கெட் சுற்று; மார்க்ஸ்மேன் அணி கிண்ணம் வென்றது!

(பழுவூரான்)

வீரமுனை மின்னொளிப் போட்டியில் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் மார்க்ஸ் மேன் அணியினர் சம்பியன் கிண் ணத்தை வெற்றி கொண்டனர்.

வீரமுனை பீனிக்ஸ் விளையாட் டுக் கழகம் நடத்திய அணிக்கு பதி னொரு பேர், பத்து ஓவர்கள் மட்டுப்படுத் திய மின்னொளி மென்பந்து கிரிக் கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) வீரமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் அட்டாளைச் சேனை மார்க்ஸ்மேன் அணியினர் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மார்க்ஸ்மேன் அணியினர் துடுப்பாட் டத்தைத் தெரிவு செய்தனர். முதலில் துடுப்பெடுத்தாடிய மார்க்ஸ்மேன் விளை யாட்டுக் கழகத்தினர் 10 ஓவர்களின் நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 67 ஓட்டங்களை பெற்றனர்.

எதிர்த்தாடிய கல்முனை பெஸ்ட் இலவென் அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 09 விக்கட்டுக்களை இழந்து 25 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற னர்.

போட்டியில் ஆட்ட நாயகன் விருதை எம்.ஐ.எம்.இர்ஸாத்தும், சிறந்த பந்துவீச் சாளருக்கான விருதை என். நபாத்தும் பெற்றுக் கொண்டனர்.

இந்தச் சுற்றுப் போட்டியில் சம்பியனா கத் தெரிவு செய்யப்பட்ட மார்க்ஸ்மேன் அணியினருக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும், வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன.

இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பெஸ்ட் இலவன் அணியின ருக்கு 30 ஆயிரம் ரூபா பணமும் வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன.

மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட றிபிள் ஜி அணியினருக்கு 10 ஆயிரம் ரூபா பணமும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யுனிட்டி அணியினருக்கு 5 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது.

குறித்த சுற்றுப் போட்டி நிகழ்வுக்கான அனுசரணையை பீனிக்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்தினர் வழங்கியி ருந்தனர்.






# மன்னார் போராட்டம் 16ஆம் நாள் இன்று செல்வநகர் கிராம மக்கள் பங்கேற்புடன்






**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கவன வீர்ப்புப் போராட்டம் இன்று திங்கட்கிழமை (18) 16 ஆவது நாளாகச் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு இன்று ஆதரவு வழங்கும் வகையில் செல்வநகர் கிராம மக்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இன்று காலை முதல் இந்தப் போராட்டம் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப் படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



# உடையார்கட்டில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் காயம்!

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் உடையார் கட்டுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு கார்கள் சேதமடைந்துள்ளன. ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் இன்று (18) காலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பயணித்த கார் ஒன்று உடையார் கட்டு பகுதியில் வீதியில் திருப்ப முற்பட்ட போது மற்றொரு காருடன் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் காரில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் மூங்கிலாறு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.








# சம்பியனாக மகுடம் சூடியது சாய்ந்தமருது பிளைங்ஹோஸ்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், நெஸ்ட் இன்டர்நெஷனல் ப்ரைவேட் லிமிடெட்டின் அனுசணையில் BATTLE OF BEST BLUE NAVY'S Challenge TROPHY/2025 சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியில், கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய சாய்ந்தமருது பிளைங் ஹோஸ் விளையாட்டுக்கழகம் மிகவும் விறுவிறுப்புக்கு மத்தியில், இரண்டு விக்கற்றுகளால் அபார வெற்றியீட்டி சம்பியனானது.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிளைங்ஹோஸ், கழகத்தின் நம்பிக்கைத் துடுப்பாட்ட வீரர், சுழல்பந்து ஜாம்பவான் உப அதிபர் எஸ்.எம். ஸ^ஜான் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு இது இரண்டாவது சிறப்பாட்டக்காரர் விருதாகும்.

குழுநிலைப் போட்டிகளில் இரு சிறப்பாட்டக்காரர் விருதுகளை அதே அணியின் சகலதுறை வீரர் எஸ்.ரீ. பர்வான் பெற்றிருந்தார்.

கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் (16) சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற லெஜன்ஸ் அணி துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்கள் முடிவில் 122:9 என்ற இலக்கை பிளைங் ஹோஸ் அணிக்கு நிர்ணயித்தனர்.

இந்த இலக்கை 16:2 ஓவரில் 124:8 என்று, மிகவும் விறுவிறுப்பான போட்டிக்கு மத்தியில் அடைந்து, 60 ஆயிரம் ரூபா பணப்பரிசுடன், கிண்ணத்தையும் பெற்று பிளைங்ஹோஸ் அணியினர் சம்பியனாக மகுடம் சூடிக்கொண்டனர்.

இரண்டாம் நிலைக் கழகமான லெஜன்ஸ் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

இந்தச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக நெஸ்ட் இன்டர்நேஷனல் ப்ரைவேட் லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் என். முஹம்மட் சப்னாஸ் கலந்து கொண்டார்.



# களுவன்கேணி கிராமத்தில் மாபெரும் மருத்துவ முகாம்!









( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஒழுங்கமைப்பில் "ஆதித்தி" கைத்தறி நிறுவனத்தின் அனுசரணையில் பொதுப்போக்குவரத்து வசதி குறைந்த களுவன்கேணி கிராமத்தில் மாபெரும் மருத்துவ முகாம் நேற்று முன்தினம் (16) முன்னெடுக்கப்பட்டது .

களுவன்கேணி விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமின் போது விழிப்புணர்வுக் கருத்தரங்கு, நடமாடும் பல் சிகிச்சைப் பிரிவு , மூக்குக் கண்ணாடி வழங்கல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் 100 மூக்குக் கண்ணாடிகளை மட்டக்களப்பு லயன்ஸ் கழகம் ஊடாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

மருத்துவ முகாமில் வைத்தியர் எஸ். நிரோஜன், வைத்தியர் கே.தனுசியா, வைத்தியர் ஸ்ரீ வித்யன் மற்றும் தொழு நோய்க்கான பிராந்திய வைத்திய அதிகாரி ரி.லுபோஜிதா மற்றும் கண் சம்பந்தமான தொழில் நுட்ப உதவியாளர், பல் வைத்தியர் எஸ். கிரிஷாந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதில் விசேஷமாக நடமாடும் பல் சிகிச்சை பிரிவில் பொது மக்களின் பல் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டன.

மருத்துவ முகாம் நடைபெற கிராம அமைப்புகள், வைத்தியர்கள், தாதியர், சுகாதார அலுவலர்கள், தாதிய மாணவிகள், மற்றும், சமூகம் சார்ந்த ஆர்வலர்கள், பாடசாலை அதிபர், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர், மூக்கு கண்ணாடி வழங்குநர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஸ்ரீநாத் இங்கு வருகை தந்த நிலையில், இப்பகுதி மக்களின் சுகாதார நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

# சிறுத்தைகளின் நடமாட்டத்தால் தோட்டத் தொழிலாளர் அச்சத்தில்!

## வளர்ப்பு நாய்களையும் விட்டு வைக்காத சிறுத்தைகள்

(க.கிஷாந்தன்)

சிறுத்தைகளின் நடமாட்டம் காரணமாக தேயிலை மலைகளில் கொழுந்து பறிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது வீடுகளில் செல்லப் பிராணிகளாக வைத்திருக்கும் நாய்களை சிறுத்தைகள் வேட்டையாடும் சம்பவம் தற்போது அதிகரித்துள்ளது என்று தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கினிகத்தேனை பகுதியில் உள்ள ஒரு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு நாய்களில் ஒன்றை, சிறுத்தை இழுத்துச் செல்வது அந்த வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமராவில் பதிவாகியுள்ளது.

சிறுத்தைகளின் நடமாட்டம் தோட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகரித்துள்ளதன் காரணமாக அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும் நாய்களை வேட்டையாடும் சம்பவம் அதிகரித்து காணப்படுகின்றது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஊடகச் செயலமர்வும் ஒன்று கூடலும்!

**(எம்.எவ்.றிபாஸ்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், பலகத்துறை கலை இலக்கிய வட்டம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, மீடியா போரத்தின் கம்பஹா மாவட்ட உறுப்பினர்களுக் கான விசேட ஒன்று கூடல் மற்றும் கம்பஹா மாவட்ட முஸ்லிம் பாடசாலை மாணவ மாணவிகள், பாடசாலை ஊடகக் கழகங்களுக்கான ஒருநாள் செயலமர்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பு போருதொட்ட அல் பலாஹ் கல்லூரியில் நடைபெற்றன.

மீடியா போரத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம். அமீன், பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் எம்.ஜே.எம். தாஜுத் தீன் ஆகியோரின் இணைத் தலைமை யில் இருவேறு அமர்வுகளாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரதியமைச்சர் அஷ்ஷெய்க் முனீர் முளப் பர் பிரதம அதிதியாகவும், மீடியா போரத்தின் நிறைவேற்றுக் குழு உறுப் பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவ மாணவிகள் மத்தியில் ஊடகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நவீன உபகரணங்கள், செயற்கை நுண்ணறிவு நவீன தொழில் நுட்பத்தின் பயன்பாடு குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்தல், பாடசாலைக ளில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளைப் பிரதான ஊடகங்களுக்குத் தெரியப் படுத்தல் அல்லது அறிக்கையிடல், என்பன தொடர்பான வழிகாட்டல் பயிற்சி களும் இதன்போது வழங்கப்பட்டன.





# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல்வராக விசேட பொது வைத்திய நிபுணர் சுந்தரேசன்!



(அபு அலா)

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் முதல்வராக நியமிக்கப்பட்ட விசேட பொது வைத்திய நிபுணர் பேராசிரியர் தெட்சிணாமூர்த்தி சுந்தரேசன் தனது கடமையைக் கடந்த செவ்வாய்க்கிழமை (12) பொறுப்பேற்றார்.

சிவாநந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவரும், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதியுமான இவர், உயர்கல்வித் துறையில் தேசிய, சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட கல்விப் பணிகளை யாற்றிவருகிறார்.

தனது மருத்துவ சேவைக்கப்பால் பல சமூக சேவைகள் மற்றும் ஆன்மீக அமைப்புகள் ஊடாக தனது பணிகளைச் செய்து வருகின்றார. சிறந்த ஆய்வாளரான இவர் சுமார் 50 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், மருத்துவம், ஆன்மீகம் மற்றும் சமூக விழிப்புணர்வு சார்ந்த பல நூல்களையும் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# பொது இடங்களை அழகுபடுத்தும் பணியை முன்னெடுக்கும் நிலாவெளி ஜனாஸா சங்கம்!





(அபு அலா)

கோபாலபுரம் - நிலாவெளி ஜனாஸா சங்கத்தின் ஏற்பாட்டில், கோபாலபுரம் மையவாடியை சுத்தம் செய்யும் பணி நேற்று மாலை (17) முன்னெடுக்கப்பட்டது.

ஜனாஸா சங்கத்தின் தலைவரும் சமூக சேவையாளருமான என்.எம்.இல்ஹாம் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சிரமதானம் பணியில் கோபாலபுரம் முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் இளைஞர் அமைப்புகள், சமூக சேவை அமைப்புக்கள் விளையாட்டுக் கழகங்கள் உள்ளிட்ட பொதுமக்களும் இதில் ஈடுபட்டனர்.


கோபாலபுரம் - மையவாடி இருள் நிறைந்த நிலைமையில் பல வருடங்களாக காணப்படுவதுடன், நீர் வசதி மற்றும் சுற்றுமதிலற்ற நிலைமையில் காணப்படுகிறது.

இந்தக் குறைபாட்டை மிக விரைவில் செய்து முடிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர் என்று ஜனாஸா சங்கத்தின் தலைவரும் சமூக சேவையாளருமான என்.எம். இல்ஹாம் தெரிவித்தார்.

பொது மக்களால் அன்றாடம் பயன்படுத்தப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற இடங்கள், பஸ்தரிப்பு நிலையம் போன்ற இடங்களைத் துப்பரவு செய்து வருகின்றனர். அதனைப் பொது மக்கள் பாவிக்கும் வகையில் திருத்தியமைக்கும் பணியையும் இந்த அமைப்பின் தலைவர் என்.எம்.இல்ஹாமின் தலைமையில் முன்னெடுத்து வருகின்றனர்.








## நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளிலும்

# தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக தபால் நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டன!

**(க.கிஷாந்தன், பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஊழியர்கள் தமது சேவையில் இருந்து விலகி பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர் என்று ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தபால் ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவு, நிர்வாக அலுவலகம் மற்றும் கணக்காய்வு அலுவலகங்களில் ஊழியர்களின் பணியை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் வெளியேறும் நேரம் என்பவற்றை கைவிரல் அடையாள இயந்திரங்களில் பதிய வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

அந்தவகையில், தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பிரதான தபால் நிலையங்கள் மற்றும் கிளை தபால் நிலையங்கள் நேற்று (17) மாலை முதல் இன்று திங்கள்கிழமைவரை மூடப்பட்டுள்ளன.

அந்தவகையில் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பொகவந்தலாவ, ஹட்டன், மஸ்கெலிய, டிக்கோயா, நுவரெலியாபோன்றபலபிரதேசங்களில் உள்ள அஞ்சல் நிலையங்கள் மூடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது .

அஞ்சல் நிலைய அதிகாரிகளின் வேலை நிறுத்தம் காரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தபால் சேவைகளும் தொழிற்சங்க போராட்டத்தால் முடங்கின!




**(பாறுக் ஷிஹான்)**

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று (18) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மத்திய தபால் பரிமாற்றத்தில் தொடங்கிய இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் நாடு தழுவிய அளவில் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் தபாலகத் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக இன்று (18) அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழங்கு மாகாணத்தின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உப தபால் நிலைய அஞ்சல் அதிபர்கள் ஊழியர்கள் ஆதரவளித்தமையால் தபால் அலுவலக சேவைகள் யாவும் முடங்கியுள்ளன.

இதன்படி அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதான தபாலகம் தவிர 12 தபால் நிலையங்கள் இந்தப் பணி பகிஸ்கரிப்பு காரணமாக மூடப்பட்டிருந்தன.

# மக்கள் நலன்களுக்காக மதுரையில் கூடுவோம் தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்

## த.வெ.கவினருக்கு விஜய் அழைப்பு



"மக்கள் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட 'மனசாட்சி உள்ள மக்களாட்சி' என்னும் உன்னத மான அரசியல் அதிகார இலக்கை நோக்கி உறுதியுடன் பயணிக்கிறோம். அதற்காக மதுரை பாரப்பத்தியில் கூடுவோம். தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்."

- இவ்வாறு த.வெ.க .தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நம் தமிழக வெற்றி கழகத்தின் மதுரை மாநாடு குறித்த இரண்டாவது கடிதம் இது. மக்களுடன் மக்களாக இணைந்து நிற்கும் மகத்தான மக்கள் அரசியல் இயக்கமான த.வெ.க. மீதான தமிழ்நாட்டு மக்களின் பேரன் பும் பேராதரவும் தேர்தல் அரசியல் களத்தில் விரைவில் நிரூபிக்கப்பட போகிறது. நமது கனவு நனவாக, இலக்கை எட்ட புரட்டிப்போட போகும் புரட்சி நிகழ இன்னும் சில மாதங்களே உள்ளன.

1967 மற்றும் 1977 தேர்தல்களின் வெற்றி விளைவுகளை, 2026 சட்ட மன்ற தேர்தலில் மீண்டும் இந்த மண்ணில் காணப் போகிறோம். மாபெரும் மக்கள் சக்தியான நீங்கள் இந்த திருப்புமுனை தருணத்தை நிரூபிக்க போவது நிச்சயம். இதை 32 ஆண்டு களுக்கும் மேலாக மக்கள் இயக்கமாக இருந்து, தினம் தினம் மக்கள் மனம் அறிந்து உணர்ந்து வரும் நாம் சொல்வதில் அடர்ந்த ஆழ்ந்த உண்மை இருப்பதை அனைவரும் அறியத் தான் போகின்றனர்.

தமிழக மக்களை உயிராக போற்றி மதிக்கும் இந்த விஜய் பற்றி உங்கள் அனைவருக்கும் நன்றி தெரியும். உங்கள் மீதான உள்ளன்புமிக்க அக்கறையின் காரணமாக இப்போது ஒன்றை சொல்ல விரும்புகிறேன். கர்ப்பிணி பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல் நலம் குன்றியோர், பள்ளி சிறார்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர், நம் கழக மாநாட்டை வீட்டில் இருந்த படியே நேரலையில் தந்து மகிழுமாறு உரிமை கலந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாநாட்டுக்கு வரும்போதும், மாநாடு நிறைவடைந்து ஊருக்கு திரும்பும் போதும் நம் கழகத் தோழர்கள் அனைவரும் ஒழுங்கையும் பாதுகாப்பையும் இராணுவ கட்டுப்பாட்டுடன் கடைபிடிக்க வேண்டும். தவெக, தகுதியும் பொறுப்பு மிக்க ஒரு அரசியல் பேரியக்கம் என்பதை நமது ஒவ்வொரு செயலிலும் காட்ட வேண்டியது நமது தலையாய கடமை.

மக்கள் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட 'மனசாட்சி உள்ள மக்களாட்சி' என்னும் உன்னதமான அரசியல் அதிகார இலக்கை நோக்கி உறுதியுடன் பயணிக்கிறோம். மகத்தான தேர்தல் அரசியல் வரலாறு மீண்டும் நம் தமிழ்நாட்டு மண்ணில் நம்மால் நிகழப்போவது நிஜம். எனவே, அத்தகைய மாபெரும் அரசியல் விளைவை நிச்சயமாக நிகழ்த்திக் காட்டும் பேரறிவிப்பாக நமது மாநில மாநாட்டை மாற்றிக் காட்டுவோம்.

உங்கள் ஒவ்வொருவருக்காகவும் உணர்வு ததும்பும் மதுரை மண்ணில், இதயம் திறந்து இரண்டு கைகளையும் விரித்து காத்திருப்பேன். மதுரை பாரப்பத்தியில் கூடுவோம். தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்." என்று தெரிவித்துள்ளார்.

# தூய்மை பணியாளர் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும்

## ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தல்

தமிழகத்தில் தூய்மைப் பணியாளர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று கமல்ஹாசன் எம்.பி. தெரிவித்தார்.

சுதந்திர தினம், ஜென்மாஷ்டமி விடுமுறையை தொடர்ந்து, நாடாளுமன்ற கூட்டம் இன்று மீண்டும் தொடங்குகிறது. இதையொட்டி, மநீம கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி., சென்னையில் இருந்து ஏர் இந்தியா விமானம் மூலம் நேற்று டில்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,



"தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்து நீண்ட நாள்களாக பேசிக்கொண்டு இருக்கிறேன். என் பேச்சுகளை முழுமையாக கவனிப்பவர்களுக்கு அது தெரியும். தமிழகத்தில் தூய்மைப் பணியாளர்களின் பிரச்சினைகளை நாம் உடனடியாக பேசி சரிசெய்ய வேண்டும். இது குறித்து முதல்வரிடம் எடுத்துச் சொல்ல இருக்கிறோம்.

வி.சி.க. தலைவர் திருமாவளவனின் சிற்றன்னை மறைந்துள்ளார். அவருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். திருமாவளவனுக்கு இந்த தகவல் நேற்றே தெரியும். ஆனால், தொண்டர்களின் மகிழ்ச்சிக்காக, பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டார்.

சேலத்தில் நடைபெறும் இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. நான் பேசிய பதிவை அனுப்பியுள்ளேன்." என்றார்.



# எங்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சமம்தான்: தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கருத்து

வாக்கு திருட்டு குற்றச்சாட்டை நிராகரித்த தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், மக்களை தவறாக வழிநடத்தும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அரசியல் சாசன சட்டத்தை அவமதிக்கிறார் என கூறியுள்ளார்.

பிஹாரில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில், 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. தேர்தல் ஆணையம், ஆளும் பா.ஜ.க.,வுடன் கூட்டு சேர்ந்து வாக்கு திருட்டு சதி செய்வதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் டில்லியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தேர்தல் ஆணையத்துக்கு எதிரிகளும் இல்லை, ஆதரவாளர்களும் இல்லை. எங்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சரி சமம்தான். வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என அனைத்து கட்சிகளும் கடந்த 20 ஆண்டுகளாக, கோரிக்கை விடுத்து வந்தன. அதனால் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியை பிஹாரில் இருந்து தொடங்கியது. அனைத்து வாக்காளர்கள், அரசியல் கட்சிகள் நியமித்த 1.6 லட்சம் வாக்குச் சாவடி முகவர்கள் ஆகியோருடன் இணைந்து செயல்பட்டு வெளிப்படையான முறையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

எனவே, வாக்கு திருட்டு போன்ற வார்த்தைகளை பயன்படுத்தி மக்களை தவறாக வழிநடத்துவது அரசியல்சாசன சட்டத்தை அவமதிக்கும் செயல். வாக்கு திருட்டு, இரட்டை ஓட்டு போன்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் ஆதாரமற்றவை. பிஹார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்த பணிகளை மேற்கொண்ட அனைவரும் வெளிப்படையான முறையில் செயல்பட்டு வாக்காளர் பட்டியலை உருவாக்கியது வெற்றிகரமான செயல். இது குறித்து சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தவறான தகவல்களை பரப்புவது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. பிஹாரில் வரைவு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களை சேர்க்க உரிமை கோரவும், எதிர்ப்பு தெரிவிக்கவும் அனைத்து கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையம் அழைப்பு விடுக்கிறது. அதற்கு இன்னும் 15 நாள்கள் உள்ளன. 45 நாள்களுக்குள் புகார் மனுக்கள் அளிக்கப்படாமல், வாக்கு திருட்டு என குற்றம் சுமத்துவது அரசியல் சாசனத்தை அவமதிப்பது போன்றது." என்றார்.





# உக்ரைனுக்கு வலுவான பாதுகாப்பு; உத்தரவாதத்துக்கு ரஷ்யா இணக்கம்

அமெரிக்காவும் ஐரோப்பாவும் உக்ரைனுக்கு வலுவான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்க ரஷ்யா இணக்கம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப், இதனைத் தெரிவித்துள்ளார்.

புடின் நீண்ட காலமாக, உக்ரைன் நேட்டோவில் இணைவதை எதிர்த்து வருகிறார்.

இந்தநிலையில் ட்ரம்ப் மற்றும் ஐரோப்பிய தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக, அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாத சலுகையை வரலாற்று சிறப்பு வாய்ந்தது என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி வரவேற்றுள்ளார்.

எந்தவொரு உத்தரவாதமும் மிகவும் நடைமுறைக்குரியதாக இருக்க வேண்டும், நிலத்திலும், வான்வெளியிலும், கடலிலும் பாதுகாப்பை வழங்க வேண்டும், அத்துடன் ஐரோப்பாவின் பங்கேற்புடன் அது உருவாக்கப்பட வேண்டும் என்று ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்யா உடன்பட மறுப்பது யுத்த முடிவிற்கு சிக்கலாகும்

## உக்ரைன் ஜனாதிபதி தெரிவிப்பு

நீண்ட நாள்களாக நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு ரஷ்யா உடன்பட மறுப்பது, யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேலும் சிக்கலாக்குவதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும், ரஷ்யா ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் இடையே இடம்பெற்ற முதல் கட்ட பேச்சு வார்த்தைகள் தோல்வியில் நிறைவடைந்துள்ள நிலையில், உக்ரைன் ஜனாதிபதியால் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தத்திற்கான ஏராளமான அழைப்புகளை ரஷ்யா தொடர்ந்தும் நிராகரித்து வரும் நிலையில், யுத்த நிறுத்தம் தொடர்பில் விளாடிமீர் புடின் இதுவரை தீர்மானிக்கவில்லை என உக்ரைன் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி இன்று வொஷிங்டன் சென்று அமெரிக்க ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளார்.



அதேவேளை, விளாடிமீர் புடினுடனான சந்திப்பிற்குப் பின்னர், உக்ரைன் யுத்த நிறுத்தத்தைக் கைவிட்டு நிரந்தர அமைதி ஒப்பந்தத்திற்கு நேரடியாகச் செல்வதைத் தாம் விரும்புவதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், ரஷ்யாவுடன் உண்மையானதும், நிலையானதும், நம்பகமான அமைதிக்கான தேவைகள் குறித்து உக்ரைன் ஜனாதிபதி தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து ரஷ்ய துருப்பினர் வெளியேற வேண்டும் எனவும் அவர் தனது சமூக வலைத் தள பதிவில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.



# காசா போரை முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தி இஸ்ரேலில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்

காசா போரை முடிவுக்குக் கொண்டுவரவும், ஹமாஸால் பிடிக்கப்பட்ட பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தவும் கோரி, இஸ்ரேலில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்.

டெல் அவிவின் பணயக்கைதிகள் சதுக்கத்தில் இது தொடர்பில் பாரிய பேரணி நடத்தப்பட்டது.

காசா நகரத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள், ஹமாஸின் பிடியில் உள்ள சுமார் 20 பணயக்கைதிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் இதன்போது மக்கள் கருத்துரைத்துள்ளனர்.

எனினும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்தப் போராட்டத்தை விமர்சித்துள்ளார்.

இந்தப்போராட்டம் ஹமாஸின் நிலைப்பாட்டைக் கடினமாக்கும் என்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதை மெதுவாக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.







கனடா முரசு
திங்கட்கிழமை 18/08/2025

## பிரதான வீதிகளில் இராணுவம் குவிப்பு

கனடாவின் பிரதான அதி வேக நெடுஞ்சாலைகளில் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டொராண்டோ மற்றும் ஒன்டாரியோ 02







# விமான பணியாளர்களின் போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை

கனேடிய விமான பணியாளர்களின் பணி நிறுத்த போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வரும் நோக்கில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எனினும், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொழிற்சங்க செயல்பாட்டிற்கு எதிரானது எனத் தெரிவித்து, ஆயிரக்கணக்கான வானூர்தி பணிப் பெண்கள் திடீர் பணிநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, அரசாங்கம் சுமார் 700 சேவைகளை ரத்து செய்தது.

இதனால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் மாற்று வழியைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

இதேவேளை, இந்த பணிநிறுத்தத்திற்காக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

















# அரசாங்க உத்தரவை ஏற்க வேண்டாம்; விமான சேவை தொழிற்சங்கம் அதிரடி




அரசு உத்தரவுக்கு பிறகும் பணியாளர்கள் பணிக்கு திரும்பாததால் ஏர் கனடா விமான சேவை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

விமான ஊழியர்கள் சம்பள உயர்வு மற்றும் பிற கோரிக்கைகளை முன் வைத்து சனிக்கிழமை முதல் கிட்டத்தட்ட 10,000 பேர் தங்களது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

இதனால் கிட்டத்தட்ட 700 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், ஏர் கனடா நிறுவனம் தங்களது சேவையை தற்காலிகமாக தடை செய்து இருப்பதாக அறிவித்தது.

இந்நிலையில் கனடா அரசாங்கம் தலையிட்டு விமான ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என உத்தரவிட்டது.

அரசாங்கத்தின் இந்த உத்தரவை தொடர்ந்து ஏர் கனடா நிறுவனமும் தங்களது சேவை ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கும் என அறிவித்தது.

ஆனால் விமான பணியாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் கனேடிய பொது ஊழியர் சங்கம், 'ஏர் கனடாவின் அழுத்தத்திற்கு கனேடிய அரசாங்கம் பணிந்துவிட்டது'. எனவே உறுப்பினர்கள் யாரும் அந்த உத்தரவை ஏற்க வேண்டாம் என்று தெரிவித்தது.

இதையடுத்து மீண்டும் ஏர் கனடா நிறுவனம் தங்கள் விமான சேவையை தொடர்ந்து நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

இந்த வேலை நிறுத்தத்தால் ஏர் கனடா நிறுவனம் மட்டுமல்லாமல் அதன் துணை நிறுவனமான ஏர் கனடா ரூஜ்-யும் தனது விமான சேவையை ரத்து செய்துள்ளது.



## பிரதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதுமான அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிக எண்ணிக்கையிலான படையினரை அவதானிக்க முடியும் என கனேடிய ஆயுதப் படை அறிவித்துள்ளது.

வாகன வாரதிகள் அதிகளவான படையினரை சந்திக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளது.

சுமார் 1,500 கனேடிய இராணுவ வீரர்கள் பயிற்சியில் ஈடுபட உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இது உருவகப்படுத்தப்பட்ட போர் நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு முக்கிய பயிற்சி நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இராணுவத்தின் பிரசன்னம் வீதிகளில் அதிகமாக காணப்பட்டதாகவும் இன்றும் இந்த நிலைமை நீடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# டொரண்டோவில் இடம்பெற்ற கை கலப்பில் ஒருவர் படுகாயம்

கனடாவின் டொரண்டோவில் இடம்பெற்ற கைகலப்பில் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

டொராண்டோவின் கிழக்கு மையப் பகுதியில் உள்ள மொஸ் பார்க் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இருவர் இடையே இடம்பெற்ற சண்டையில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார் என டொராண்டோ பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் அதிகாரிகள் காயமடைந்த ஒருவரை மீட்டதுடன், அருகில் மற்றொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர், கைது செய்யப்பட்டவர் பலத்த காயங்களுடன் டொராண்டோ மருத்துவக் குழுவினரால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணையாளர்களின் கூற்றுப்படி, இரு ஆண்களும் கத்தியால் குத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை பாராட்டுக்கிறார் கனடிய பிரதமர்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, கனடா பிரதமர் மார்க் கார்னி புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

ட்ரம்பின் தலைமை "ரஷ்யாவின் உக்ரைனில் முன்னெடுத்து வரும் சட்டவிரோத போரை முடிவுக்கு கொண்டுவர வாய்ப்பை உருவாக்குகிறது" என கார்னி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அலாஸ்காவில் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதினை சந்தித்ததன் பின்னர், போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்க நிர்வாகத்தின் முயற்சிகளை கார்னி பாராட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, கனடா பிரதமர் மார்க் கார்னி புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

ட்ரம்பின் தலைமை ரஷ்யாவின் உக்ரைனில் முன்னெடுத்து வரும் சட்டவிரோத போரை முடிவுக்கு கொண்டுவர வாய்ப்பை உருவாக்குகிறது என கார்னி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அலாஸ்காவில் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதினை சந்தித்ததன் பின்னர், போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்க நிர்வாகத்தின் முயற்சிகளை கார்னி பாராட்டியுள்ளார்.